2018 ஜூலை 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 4–00

(அள) தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/2018), மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/2018) @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

@ 27–6–2018 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 9 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 9 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/2018) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

2018 ஜூலை 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

7. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(உ) பேரவை நிறைவேற்றிய அலுவல்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *"அச்சம் என்பது மடமையடா" என்றே உதிரத்தில் வீரத்தை உணவாக ஊட்டிய மன்னாதி மன்னனின் அடையாளம், "அஞ்சுவதும் இல்லை, அஞ்ச வருவது யாதொன்றும் இல்லை" என்ற அப்பர் பெருமானின் பாயிரத்தை அமுதாக பிசைந்தூட்டி, துச்சப் பகையை மிச்சமின்றி துடைத்தெறியும் வித்தையைக் கற்றுத் தந்த காவியம்; பள்ளியிலும் பந்தியிட்டு, ஆலயத்திலும் அன்னமிட்டு, பசிப்பிணியை துடைத்தெறிந்து, பாசத்தைப் பகிர்ந்திட்ட பரவசம்; மரத்தடி வகுப்புகளை மாற்றி, மடிக்கணினி வகுப்புகளாக்கி, மாணவர்க்கு மேன்மை தரும் பாதை தந்த புண்ணியம்; பாமரர்க்கும் பூமரத்தோடு பசுமை வீடு எழுப்பி, பச்சிளங் குழந்தைக்கும் பரிசுப் பெட்டகம் அனுப்பி, ஈகையின் இலக்கணத்தை உரைத்திட்ட உன்னதம்; மக்கள் வாழ்க்கை செழித்திட, செழிக்கும் வாழ்க்கை நிலைத்திட, நிலைத்த வாழ்க்கை தொடர்ந்திட, திட்டங்களைத் தந்த ஓவியம்; தாலிக்கு தங்கம் தந்து, தமிழுக்கு தலைசிறந்த அங்கம் தந்து, தமிழன் கட்டும் வேட்டிக்கும் தன்னிகரில்லா பெருமை தந்து, எங்களின் வாகைக்கு வரம் தந்த வரப்பிரசாதம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.* (மேசையைத் தட்டும் ஒலி)

நாங்கள் நிழலின்றி வெயிலில் தவித்தபோது, எங்களுக்கு நிழல் தரும் கற்பக விருட்சமாய் இருந்தீர்கள். முகம் தெரியாமல் எங்கோ ஒரு மூலையில் இருந்த எங்களுக்கு முகவரி தந்து பெருமை